கோவையில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் ஒன்றிய அரசை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ள நிலையில் கோவை வ.உ.சி. மைதானத்தில் அனைத்து தொழிற்சங்க கூட்டமைப்பு சார்பாக நடைபெற்ற கவன ஈர்ப்பு இருச்சக்கர வாகன பேரணியை கோவை மாநகர் மாவட்ட பொறுப்பாளர் துரை.செந்தமிழ்ச் செல்வன் கொடியசைத்து துவக்கி வைத்தார். இதில் தலைமை செயற்குழு உறுப்பினர் ஏர்போர்ட் ராஜேந்திரன், தொழிற்சங்க கூட்டு நடவடிக்கை குழு சி.தங்கவேல், கே.எம்.செல்வராஜ் (AITUC), CTC பி.துரை, வி.ஆனந்த், நா.தமிழ்ச்செல்வன் (LPF), பாசமலர் பி. சண்முகம், புவனேஸ்வரி (INTUC), டி.எஸ்.ராஜாமணி, ஜி.மனோகரன் (HMS), எஸ்.கிருஷ்ணமூர்த்தி, ஆர்.வேலுச்சாமி (CITU), மு.தியாகராசன், எஸ்.எஸ்.காளியப்பன் (DTMS), பிலோமினா (AICCTU), க.பாலசுப்ரமணியன், ஷாஜகான் (MLF),பாஸ்டின் ராஜ் (UTUC),ஹக்கீம், ஷாஜகான் (SDTU) உள்பட தொழிற்சங்க நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர்!

09.02.2026 நிகழ்வுகள்

கழக மக்களவை - மாநிலங்களவை உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விகள்!

1. பட்டியல் சாதி/பழங்குடியின அதிகாரிகளுக்குத் "தனித் தகுதி" பதவி உயர்வு வழங்கும் கொள்கை செயல்படுத்தப்படாதது ஏன்?

ஆ. இராசா

பணியாளர் மற்றும் பயிற்சித் துறை (DoPT) அலுவலக குறிப்பாணைகளில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, மத்திய நேரடி வரிகள் வாரிய அலுவலகத்திலும் அதன் 18 கேடர் கட்டுப்பாட்டு அதிகாரிகளிடமும், பட்டியல் சாதி/பழங்குடியின அதிகாரிகளுக்குத் தகுதியுடன் கூடிய பணிமூப்பு அடிப்படையில் "தனித் தகுதி" பதவி உயர்வு வழங்கும் கொள்கை செயல்படுத்தப்படாதது தொடர்பாக அரசாங்கத்திற்கு ஏதேனும் புகார்கள் வந்துள்ளனவா என்றும் துறையில் "தனித் தகுதி" பதவி உயர்வுகள் செயல்படுத்தப்படாததால் 10,000-க்கும் மேற்பட்ட காலியிடங்கள் தேங்கிக் கிடக்கின்றன என்றும் அவற்றை குறிப்பிட்ட காலவரையறைக்குள் நிரப்ப அரசாங்கத்தால் எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கைகள் என்ன?

2. மாசுக் கட்டுப்பாடு குறித்த தீவிர ஆய்வு நடத்துக!

கலாநிதி வீராசாமி

2011 ஆம் ஆண்டு முதல் கடந்த பத்தாண்டுகளில், சீனா நகர்ப்புறங்களில் PM2.5 அளவை 32 சதவீதம் வரையிலும், உலக அளவில் சுமார் 10 சதவீதம் வரையிலும் கணிசமாகக் குறைத்துள்ளது, ஆனால் இதே காலகட்டத்தில் இந்தியாவின் சராசரி அளவு வெறும் 0.4 சதவீதம் மட்டுமே மாறியுள்ளது என்பது உண்மையா?

சமீபத்திய கண்காணிப்புத் தரவுகளின்படி, நாடு முழுவதும் உள்ள முக்கிய நகரங்கள் மற்றும் தொழில்துறை மையங்களில் தற்போதைய காற்று மாசுபாட்டின் அளவுகள் (PM2.5, PM10, NO, SO) என்ன? விதிமுறைகள் இருந்தபோதிலும், பல நகரங்களில் காற்று மாசுபாட்டின் அளவுகள் தேசிய சுற்றுப்புறக் காற்றுத் தரநிலைகளுக்கு மேல் தொடர்ந்து இருப்பதற்கான காரணங்கள் என்ன? மாசுபடுத்தும் தொழில்களுக்கான சட்டத்தின்கீழ் உள்ள அபராத விதிகள், கடந்த மூன்று ஆண்டுகளில் விதிமுறைகளை மீறியதற்காக அபராதம் விதிக்கப்பட்ட தொழில்கள் மற்றும் வாகனங்களின் மொத்த எண்ணிக்கை என்ன? குறிப்பாக டெல்லி-என்சிஆர், மும்பை, பெங்களூரு, சென்னை மற்றும் கடுமையான மாசுபாட்டை எதிர்கொள்ளும் பிற நகர்ப்புறங்களில் காற்று மாசுபாட்டைக் குறைக்க அமைச்சகத்தால் எடுக்கப்பட்ட அல்லது முன்மொழியப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

3. தமிழ்நாட்டிலுள்ள அரசு ஐடிஐ-க்களை நவீனமயமாக்குவதற்கான திட்டத்தின் செயல்பாடுகள் என்ன?

காஞ்சிபுரம் ஜி.செல்வம்

திருவண்ணாமலை சி.என்.அண்ணாதுரை



மேம்படுத்தப்பட்ட ஆய்வகங்கள், இயந்திரங்கள் மற்றும் தொழில்துறைக்கு ஏற்ற பாடத்திட்டத்துடன் 1,000 அரசு தொழிற்பயிற்சி நிறுவனங்களை (ஐடிஐ) நவீனமயமாக்குவதற்காக ஒன்றிய அரசால் தொடங்கப்பட்ட பிஎம்-சேது திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து திமுக மக்களவை உறுப்பினர்கள் ஜி. செல்வம் மற்றும் சி. என். அண்ணாதுரை கேள்வி எழுப்பியுள்ளனர். பிஎம்-சேது திட்டத்தின்கீழ் மேம்படுத்துவதற்காகத் தமிழ்நாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு ஐடிஐ-க்களின் எண்ணிக்கை என்ன? இந்த நவீனமயமாக்கல் முயற்சிகளின் விளைவாக, மாணவர்கள் பெறும் மேம்படுத்தப்பட்ட வேலை மற்றும் தொழில் வாய்ப்புகள் என்ன? கடந்த மூன்று ஆண்டுகளில் மேற்கூறிய மற்றும் அது தொடர்பான பிற திட்டங்களின்கீழ் தமிழ்நாட்டில் உள்ள ஐடிஐ-க்களை மேம்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்ட, விடுவிக்கப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட நிதிகள் குறித்த விவரங்கள் என்ன?

4. தமிழ்நாட்டில் பிஎம்-உஷா திட்டத்தை முறையாக செயல்படுத்துக!

காஞ்சிபுரம் ஜி.செல்வம்

திருவண்ணாமலை சி.என்.அண்ணாதுரை

கடந்த மூன்று ஆண்டுகளில் பிஎம்-உஷா திட்டத்தின்கீழ் ஆதரவளிக்க ஒப்புதல் அளிக்கப்பட்ட மாநிலத்தின் கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை மற்றும் அனுமதிக்கப்பட்ட, விடுவிக்கப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட நிதிகளின் விவரங்கள் யாவை? பிஎம்-உஷா திட்டத்தின் தலையீடுகள் இருந்தபோதிலும், ஆசிரியர்கள், ஆராய்ச்சி ஆய்வகங்கள், டிஜிட்டல் கற்றல் வசதிகள் மற்றும் மாணவர் ஆதரவு சேவைகளில் தொடர்ந்து நீடிக்கும் போதாமைகளை தீர்க்க வழிமுறைகள் என்ன? மாநிலத்தில் பிஎம்-உஷா ஆதரவு பெற்ற கல்லூரிகளில் மாணவர்களின் சேர்க்கை, மற்றும் வேலைவாய்ப்பில் ஏற்பட்ட மேம்பாடுகள் குறித்து அரசாங்கத்தால் நடத்தபட்ட மதிப்பீட்டு ஆய்வுகள் என்ன? பிஎம்-உஷா நிதியுதவியானது தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் மேம்படுத்தப்பட்ட கல்வித் தரம் மற்றும் அனைவருக்கும் உயர்தர உயர்கல்விக்கான சமமான வாய்ப்பாக அமைவதை உறுதிசெய்ய அரசாங்கம் எடுத்து வரும் நடவடிக்கைகள் யாவை? என்றும் அவர்கள் கேட்டுள்ளனர்.

5. அதிக பணவீக்கக் குறியீட்டில் 60வது இடத்தில் இந்தியா?

வேலூர் கதிர் ஆனந்த்

பன்னாட்டு நாணய நிதியத்தின் (IMF) 2026ஆம் ஆண்டுக்கான 190 நாடுகளின் பணவீக்க முன்னறிவிப்புத் தரவுகளின்படி, இந்தியா 4.0 சதவீத பணவீக்க விகிதத்துடன் அதிக பணவீக்கக் குறியீட்டில் 60வது இடத்தில் உள்ளதை குறித்து திமுக மக்களவை உறுப்பினர் கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பியுள்ளார். அமெரிக்க டாலருக்கு எதிராக இந்திய ரூபாயின் மதிப்பு சரிவடைந்ததால், இறக்குமதி விலைகள் அதிகரித்ததா, அதன் விளைவாக தங்கம், வெள்ளி மற்றும் பிற இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் விலைகள் உயர்ந்தனவா என்றும் அது குறித்து அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் கேள்வி எழுப்பியுள்ளார்.

6. கிராமப்புற விளையாட்டு உள்கட்டமைப்பை மேம்படுத்துக

ஆரணி தரணிவேந்தன்

தமிழ்நாட்டின் கிராமப்புறங்களில் உள்ள விளையாட்டு உள்கட்டமைப்பின் தற்போதைய நிலையை அறிய அரசாங்கம் நடத்திய ஆய்வுகள் என்ன என்றும் விளையாட்டு மைதானங்கள், அரங்கங்கள், உள்ளரங்கப் பயிற்சி வசதிகள் மற்றும் தகுதிவாய்ந்த பயிற்சியாளர்களின் இருப்பு ஆகியவற்றில் கண்டறியப்பட்ட குறைபாடுகளின் விவரங்கள் யாவை என்றும் திமுக மக்களவை உறுப்பினர் தரணி வேந்தன் கேள்வி எழுப்பியுள்ளார்.

'கேலோ இந்தியா' மற்றும் தேசிய விளையாட்டு கூட்டமைப்புகளுக்கு மாநில உதவி போன்ற திட்டங்களின்கீழ், கிராமப்புற விளையாட்டு உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக தமிழ்நாட்டிற்கு கூடுதல் நிதி உதவியை வழங்க அரசாங்கம் உத்தேசித்துள்ளதா? கடந்த ஐந்து ஆண்டுகளில் விளையாட்டு உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்காக நிதி பெற்ற தமிழ் நாட்டில் உள்ள கிராம பஞ்சாயத்துகள், பள்ளிகள் மற்றும் கல்லூரிகளின் எண்ணிக்கை என்ன? மேம்படுத்தப்பட்ட வசதிகள் மற்றும் பயிற்சியின் மூலம் கிராமப்புற இளைஞர்கள், குறிப்பாகப் பெண்கள், பட்டியல் சாதி/பழங்குடியின இளைஞர்கள் மற்றும் மாற்றுத்திறனாளி குழந்தைகளிடையே விளையாட்டுப் பங்கேற்பை மேம்படுத்த அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை? மத்திய நேரடி வரிகள் வாரியத்தில் பட்டியல் சாதி/பழங்குடியின அதிகாரிகளுக்கு "தனித் தகுதியின்" அடிப்படையில் பதவி உயர்வுகள் வழங்க அரசு எடுத்திருக்கும் நடவடிக்கை என்ன?

7. தர்மபுரி மாவட்டத்து இளைஞர்கள் வேலைக்காக புலம்பெயர்வதை தடுக்க உள்ளூர் வேலைவாய்ப்பை ஏற்படுத்துக!

தர்மபுரி ஆ.மணி

திறமையும் முறையான பயிற்சியும் பெற்றிருந்தபோதிலும், கணிசமான எண்ணிக்கையிலான திறமையான தொழிலாளர்கள் வேலையின்றி அல்லது பகுதி நேர வேலையுடன் இருந்து, வேலை தேடி மற்ற மாநிலங்களுக்கோ அல்லது வெளி நாடுகளுக்கோ புலம்பெயர வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர்.

தருமபுரி போன்ற அதிக அளவில் மக்கள் வெளியேறும் மாவட்டங்களில், திறமையான தொழிலாளர்களிடையே வேலையின்மை விகிதம் அதிகமாக உள்ளதற்கு காரணங்களை அரசு ஆராய்ந்துள்ளதா? திறன் பயிற்சிக்கும் தொழில்துறைத் தேவைக்கும் இடையிலான இடைவெளிகள், உள்ளூர் வேலைவாய்ப்புகளின் பற்றாக்குறை, பயிற்சி பெற்ற தொழிலாளர்களிடையே நிலவும் இத்தகைய தொடர்ச்சியான வேலையின்மைக்கு அரசாங்கத்தால் கண்டறியப்பட்ட காரணங்கள் யாவை? திறன் மேம்பாட்டு திட்டங்களை உள்ளூர் தொழில்துறைத் தேவைகளுக்கேற்ப ஒருங்கிணைக்கவும் பின்தங்கிய பகுதிகளில் வேலைவாய்ப்பை உருவாக்குவதை ஊக்குவிக்கவும், பயிற்சிப் பணிகளையும் வேலைவாய்ப்பு ஆதரவையும் வலுப்படுத்தவும், திறமையான இளைஞர்களின் கட்டாயப் புலம்பெயர்வதைக் குறைக்கவும் அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட/எடுக்கப்பட்டு வரும் சீர்திருத்த நடவடிக்கைகள் யாவை?

8. சென்னை மெட்ரோ ரயில் இரண்டாம் கட்டத் திட்டத்திற்கான நிதி வழங்குவதில் தாமதம் ஏன்?

ராஜாத்தி சல்மா

சென்னை மெட்ரோ ரயில் இரண்டாம் கட்டத் திட்டத்திற்கான மத்திய அரசின் பங்களிப்பிற்காக, மாநில அரசு முன்கூட்டியே வழங்கிய 9,500 கோடியை விடுவிப்பது தொடர்பாக, தமிழ்நாடு அரசிடமிருந்து மத்திய அரசுக்கு கோரிக்கைகள் வந்தும், நிதியை விடுவிப்பதில் தாமதம் ஏன் என திமுக மாநிலங்களவை உறுப்பினர் ராஜாத்தி சல்மா கேள்வி எழுப்பியுள்ளார். 2024-25 மற்றும் 2025-26 நிதியாண்டுகளுக்கான முழுமையாக அங்கீகரிக்கப்பட்ட பங்கை விடுவிப்பதில் ஏற்பட்டுள்ள தாமதத்திற்கான காரணங்கள் யாவை? இரண்டாம் கட்டத் திட்டம் முழுவதையும் முடிப்பதற்கான காலக்கெடு என்ன, மேலும் முதல் செயல்பாட்டுப் பகுதி (பூந்தமல்லி முதல் போரூர் வரை) எப்போது தொடங்கி வைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது?

2.56 கோடி பேருக்கு குடற்புழு நீக்க மாத்திரை!

பறவைக் காய்ச்சல் பாதிப்பு: பெரிய அளவில் பதற்றம் கொள்ளத் தேவையில்லை!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேட்டி!

சென்னை,பிப்.11- முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, "1-19 வயதுடைய 2.1 கோடி குழந்தைகளுக்கும், 20-30 வயதுடைய 54.42 இலட்சம் பெண்களுக்கும், மொத்தம் 2.56 கோடி பயனாளிகளுக்கு குடற்புழு நீக்க மாத்திரை வழங்கப்பட உள்ளது என்றும், "பறவைக்காய்ச்சல் பாதிப்பு குறித்து பெரிய அளவில் பதற்றம் கொள்ள வேண்டிய தேவையில்லை என்றும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் குடற்புழு மாத்திரைகளை மாணவிகளுக்கு வழங்கி உறுதிமொழி ஏற்று பேட்டியளிக்கையில் குறிப்பிட்டார்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (10.02.2026) சென்னை, சைதாப்பேட்டை மாந்தோப்பு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில், பொது சுகாதாரம் மற்றும் நோய்தடுப்பு மருந்து துறை சார்பில் நடைபெற்ற தேசிய குடற்புழு நீக்க மாத்திரை வழங்கும் முகாமினை தொடங்கி வைத்து, மாணவிகளுக்கு குடற்புழு மாத்திரைகளை வழங்கி, உறுதிமொழி ஏற்று, விழா பேருரையாற்றினார்.

பின்னர் அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்தாவது:-

குடற்புழு நீக்க மாத்திரை வழங்கும் முகாம் தொடக்கம்

2006-2007 ஆம் ஆண்டு தேசிய குடற்புழு நீக்க மாத்திரை வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்தோம், இன்றைய முதலமைச்சர் அன்று துணை முதலமைச்சர் ஆக இருந்த பொழுது இந்த திட்டத்தை இங்கு தொடங்கி வைத்தார். 2011 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்திற்குப் பிறகு ஜெயலலிதா அம்மையார் இந்த திட்டத்தை தமிழ்நாடு முழுவதும் அரசு பள்ளியில் தொடங்குவோம் என்று அறிவித்தார். நான்கு வருடங்களுக்கு முன்பாகவே சென்னை மாநகராட்சியில் தொடங்கிவிட்டது என்று மாற்று அறிக்கை வெளியிட்டோம். ஒரு மாநகராட்சி எல்லையில் தொடங்கி பிறகு மாநிலம் முழுவதும் ஒரு திட்டமாக மாறி இன்று தேசிய அளவில் ஒரு திட்டமாக மாறி உள்ளது அதற்கு வித்திட்டது சென்னை மாநகராட்சி. அன்று சென்னை மாநகராட்சி சார்பாக தொடங்கப்பட்டது இந்த பள்ளியில் தான். இந்தியா முழுக்க இந்த திட்டம் சென்று அடைந்திருக்கிறது என்றால் அதற்கு வித்திட்டது இந்த பள்ளிதான்.

குடற்புழு நீக்க அல்பெண்டசோல் மாத்திரை உட்கொள்வதினால் குடற்புழுக்கள் முற்றிலுமாக நீக்கப்படுகிறது. இரத்த சோகை மற்றும் ஊட்டச்சத்து குறைபாட்டை தடுக்கிறது. நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்து சுறுசுறுப்பாக இருக்க உதவுகிறது. நினைவாற்றல், கற்றல்திறன் மற்றும் உடல்வளர்ச்சியை மேம்படுத்தவும். உடல் ஆரோக்கியமாக இருக்கவும் உதவுகிறது என்றார். மேலும் 1 -19 வயதுடைய 2.1 கோடி குழந்தைகளுக்கும், 20-30 வயதுடைய 54.42 இலட்சம் பெண்களுக்கும், மொத்தம் 2.56 கோடி பயனாளிகளுக்கு குடற்புழு நீக்க மாத்திரை வழங்கப்படுகிறது. தேசிய குடற்புழு நீக்க மாத்திரை வழங்கும் சிறப்பு முகாமில் 54,439 அங்கன்வாடி பணியாளர்களும், 58,600 பள்ளி ஆசிரியர்களும் மற்றும் கல்லூரி பேராசிரியர்களும், 6,093 மருத்துவர்களும், 12,456 கிராம சுகாதார செவிலியர்கள், 2,650 ஆஷா பணியாளர்கள் மற்றும் அனைத்து சுகாதாரத்துறை பணியாளர்களும், இச்சிறப்பு முகாமில் ஈடுபடுகின்றனர்.

பறவைக்காய்ச்சல் தொடர்பாக பத்திரிக்கையாளர்களுக்கு விளக்கம்

பறவைக்காய்ச்சல் பாதிப்பு குறித்து இன்று காலை சென்னை ஓமந்தூரார் தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனை செய்தியாளர் சந்திப்பில் பறவைக் காய்ச்சல் தொடர்பான கேள்விக்கு நான் அளித்த விளக்கத்தை தவறான புரிதலில் ஆஃபாயில் முட்டை சாப்பிடக் கூடாது என்ற செய்தி வெளிவந்துள்ளது அதற்கான விளக்கம்

பறவை காய்ச்சல் பாதிப்பால் ஒரு கோழி இறந்து விட்டால் அதனை சாப்பிடக்கூடாது, மேலும் ஆஃபாயிலாக வேக வைத்த கோழியை சாப்பிடக்கூடாது, முழு பாயிலாக வேக வைத்த கோழியை தான் சாப்பிட வேண்டும் என்று நான் கூறினேன், நன்றாக வேகவைத்த முட்டையை தான் சாப்பிட வேண்டும், ஆஃபாயில் முட்டை சாப்பிட வேண்டாம் என்று நான் கூறவில்லை .

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமார், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு. சோமசுந்தரம், மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.சுகந்தி இராஜகுமாரி, மண்டலக்குழுத் தலைவர் கிருஷ்ணமூர்த்தி, கூடுதல் இயக்குநர்கள் மரு. தேவபார்த்தசாரதி, மரு. சேரன், மாநகர நல அலுவலர் மரு.ஜெகதீசன், இணை இயக்குநர் (தாய்சேய்நலம்) மரு.சாந்தி மற்றும் பள்ளி ஆசிரியர்கள், மாணவிகள் பலர் கலந்து கொண்டனர்.

வனவிலங்கு அச்சுறுத்தல்களிலிருந்து பாதிக்கப்பட்ட பழங்குடியின குழுக்களுக்கு மத்திய நிதியுதவி பெறும் திட்டங்களின் கீழ்

தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட்ட நிதி அல்லது தொழில்நுட்ப உதவியின் விவரங்கள் என்ன?

மக்களவையில் — கே.ஈஸ்வரசாமி கேள்வி!

புதுடெல்லி,பிப்.11- வனவிலங்கு அச்சுறுத்தல்களிலிருந்து பாதிக்கப்பட்ட பழங்குடியின குழுக்களுக்குப் பாதுகாப்பான வீட்டுவசதி மற்றும் நிலையான வாழ்வாதாரத்தை உறுதி செய்வதற்காக, ஏதேனும் மத்திய அல்லது மத்திய நிதியுதவி பெறும் திட்டங்களின் கீழ் தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட்ட நிதி அல்லது தொழில்நுட்ப உதவியின் விவரங்கள் என்ன என்று மக்களவையில் பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர், திருப்பூர் தெற்கு மாவட்ட கழகப் பொறுப்பாளர் கே.ஈஸ்வரசாமி கேள்வி எழுப்பினார்.

சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் பின்வருவனவற்றைத் தெரிவிக்க விரும்புவாரா,

தமிழ்நாட்டின் ஆனைமலை வனப்பகுதிக்குள் அமைந்துள்ள நவமலை குக்கிராமத்தில், வனவிலங்குகளின் ஊடுருவல் அதிகரித்து பழங்குடியின மக்களின் உயிருக்கு ஆபத்தை விளைவிப்பது குறித்து அரசு அறிந்துள்ளதா? அப்படியெனில், அதன் விவரங்கள் என்ன?

இத்தகைய அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளும் காடு சார்ந்து வாழும் சமூகங்களின் பாதுகாப்பு, வாழ்விடப் பாதுகாப்பு மற்றும் அத்தியாவசிய சேவைகளைப் பெறுவதை உறுதி செய்ய, மாநில அரசுடன் இணைந்து மத்திய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

மனித வனவிலங்கு மோதல்களால் பாதிக்கப்பட்ட பழங்குடியின சமூகங்களை, குறிப்பாகச் சூழலியல் ரீதியாக முக்கியமான பகுதிகளில் இருந்து இடமாற்றம் செய்ய அல்லது மறுவாழ்வு அளிக்க ஏதேனும் தேசிய அளவிலான திட்டம் அல்லது வழிகாட்டுதல்களை அரசு வகுத்துள்ளதா?

வனவிலங்கு அச்சுறுத்தல்களிலிருந்து பாதிக்கப்பட்ட பழங்குடியின குழுக்களுக்குப் பாதுகாப்பான வீட்டுவசதி மற்றும் நிலையான வாழ்வாதாரத்தை உறுதி செய்வதற்காக, ஏதேனும் மத்திய அல்லது மத்திய நிதியுதவி பெறும் திட்டங்களின் கீழ் தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட்ட நிதி அல்லது தொழில்நுட்ப உதவியின் விவரங்கள் என்ன என்று மக்களவையில் பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர், திருப்பூர் தெற்கு மாவட்ட கழகப் பொறுப்பாளர் கே.ஈஸ்வரசாமி கேள்வி எழுப்பினார்.

தமிழ்நாட்டில் கிராமப்புற வளர்ச்சியை கொண்டு வருவதில் UBA வின் செயல்திறன் என்ன?

UBA வின் கீழ் தமிழ்நாட்டில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட

உயர்கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை எவ்வளவு?

நாடாளுமன்றத்தில் — தே.மலையரசன் கேள்வி!

புதுடெல்லி,பிப்.11- கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன் நாடாளுமன்றத்தில் எழுப்பிய கேள்விகள் வருமாறு:-

தமிழ்நாடு உட்பட தென் மாநிலங்களில் நிலையான கிராமப்புற வளர்ச்சியைக் கொண்டுவருவதில் உன்னத் பாரத் அபியான் (UBA)இன் முன்னேற்றம் மற்றும் செயல்திறனை ஒன்றிய அரசு மதிப்பிட்டுள்ளதா?

அப்படியானால் அதன் விவரங்கள் என்ன?

UBAவின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ்நாட்டிலிருந்து உயர்கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை எவ்வளவு?

பங்கேற்கும் நிறுவனங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதி போதுமானதாக இருந்ததா மற்றும் இந்தியாவில் சரியான நேரத்தில் வெளியிடப்பட்டதா எனில், கடந்த 5 ஆண்டுகளில் வெளியிடப்பட்ட நிதியின் விவரங்கள் என்ன?

மேம்பட்ட வாழ்வாதாரம், டிஜிட்டல் கல்வியறிவு, கிராமப்புற உள்கட்டமைப்பு அல்லது திறன் மேம்பாடு போன்ற அளவிடக்கூடிய சமூக பொருளாதார விளைவுகள் UBAவின் கீழ் தமிழ்நாட்டில் பதிவாகியுள்ளதா ? அப்படியானால் அதன் விவரங்கள்?

கண்காணிப்பு வழிமுறைகளை வலுப்படுத்த ஒன்றிய அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் நிறுவன ஆதரவை மேம்படுத்துதல் மற்றும் மேலும் கிராமப்புறக் குழுக்களுக்கு நிரலாக்கத்தை விரிவுபடுத்துதல் அதன் விவரங்கள் என்ன?

இவ்வாறு தே. மலையரசன் கேள்வி எழுப்பினார்.